(மேசையைத் தட்டும் ஒலி) என்ற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் பாடல் வரிகளுக்கு உயிரோட்டம் கொடுக்கும் வகையில், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் தொழிலாளர்கள் பட்ட கஷ்டங்கள், இப்போது மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் நீங்கிவருகிறது.

முற்பகல் 10-20

சாமானிய மனிதனுக்கும் சமூக நீதி கிடைத்திட வேண்டுமென்று நாடாளுமன்ற மாநிலங்களவையில் பேசினீர்கள். அதன் வெளிப்பாடு, தங்கள் ஆட்சியில் 1994 ஆம் ஆண்டு 69 சதவிகித இடஒதுக்கீட்டிற்குச் சட்ட அங்கீகாரம் தந்து, சமூக நீதி காத்த வீராங்கனை எங்கள் மாண்புமிகு அம்மா அவர்களே! (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் வீரத்தின் விளை நிலம். நாடாளுமன்ற மாநிலங்களவையில் வரதட்சணைக் கொடுமைக்குக் கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டுமென்று முழக்கமிட்டு, ஒட்டுமொத்த இந்தியப் பெண்களின் நலன்களையும் பாதுகாக்க வழிவகுத்த அன்னையே, மாண்புமிகு அம்மா அவர்களே! நீங்கள் 7-5-1984-இலேயே நாடாளுமன்ற மாநிலங்களவையில் இலங்கையில் நடக்கும் இனப் படுகொலையைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று பேசினீர்கள். இன்று அது நடத்தப்பட்டுவிட்டது. "இலங்கைமீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டுமென்று" இந்த மாமன்றத்தில் கொண்டுவந்த தீர்மானம், உங்களின் துணிச்சலுக்குச் சிறந்த எடுத்துக்காட்டு. அன்னை சந்தியா என்கின்ற கருணைத் தாய் கொடுத்த கொடையே! "Nothing is impossible" the word itself says, I'm Possible" என்று எங்கள் நம்பிக்கையை வளர்த்து நல்வழி நடத்தும் எங்கள் குருவே!

தூத்துக்குடியில் விவசாயக் குடும்பத்தைச் சார்ந்த சி. தங்கராஜ் நாடார்-எஸ்தர் மணியம்மை ஆகியோருக்கு 7-ஆவது மகனாகப் பிறந்த என்னை, அண்ணா தொழிற்சங்க மாவட்டச் செயலாளராக்கி, 2011-இல் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு தந்து, 26,193 வாக்குகள் வித்தியாசத்தில் என்னை வெற்றி பெறச் செய்து, தொழிலாளர் நலத் துறையின் அமைச்சராக்கி, தற்போது மாநில அண்ணா தொழிற்சங்கப் பேரவையின் இணைச் செயலாளராக்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா, உங்கள் திருவடிகளை வணங்கி என்னுடைய பதிலுரையைத் துவங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உழைக்கும் கைகளே, உருவாக்கும் கைகளே,
உலகைப் புது முறையில் உண்டாக்கும் கைகளே,
ஆற்று நீரைத் தேக்கி வைத்து
அணைகள் கட்டும் கைகளே" (மேசையைத் தட்டும் ஒலி)

என்ற புரட்சித் தலைவர் அவர்களின் பாடல் வரிகளுக்கேற்ப உழைக்கும் கைகளுக்குச் சொந்தமான தொழிலாளர்கள்தான் ஏற்றமிகு அரசை உருவாக்க முடியுமென்று அறிந்து, அவர்களுக்கு ஏற்றம் தருகிற அரசு இது. மாண்புமிகு அம்மா அவர்கள் எண்ணத்தில் உள்ளதுபோல, ஏற்றம் பெறுகிற நாட்டுக்கு அழகியத் தோற்றம் தருகின்ற பெருமக்கள் தொழிலாளர்கள்தான். அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், அவர்களின் பணி நிலைமைகளை மேம்படுத்தவும், நல்ல தொழில் உறவு வளர்வதற்கான சூழ்நிலைகளை உருவாக்கவும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, பல உன்னதமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

"மக்கள் நலம், மக்கள் நலம் என்றே சொல்லுவார்
தம் மக்கள் நலம் ஒன்றேதான் மனதில் கொள்ளுவார்"
(மேசையைத் தட்டும் ஒலி)

என்ற பாடல் வரிகளுக்கேற்ப தன் குடும்பத்திற்குச் சொத்தை சேர்ப்பதில் குறியாய் இருந்து தமிழகத்தைச் சோகத்தில் ஆழ்த்திவிட்டார்கள் கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியாளர்கள்.

"விழித்துக்கொண்டோரெல்லாம் பிழைத்துக் கொண்டார்" என்பதற்கேற்ப, "தமிழக மக்களின் விழிப்பு மாண்புமிகு அம்மா அவர்களின் ஜெயிப்பு" (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டு மக்களை வையத்துள் வாழ்வாங்கு வாழ்விக்க வந்த தெய்வம் எங்கள் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழக மக்களின் உயிரெழுத்து. அவர்கள் ஆட்சிக்கு வந்ததும் போட்டார்கள் 7 கையெழுத்து. அதனால் மாறிப்போனது ஏழைகளின் தலையெழுத்து! நான் சொல்வது அனைத்தும் மெய்யெழுத்து! (மேசையைத் தட்டும் ஒலி)